**தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை–6**
**ந.க. எண். 036877 /எம்/இ2/2019, நாள்.06.09.2019**

**பொருள்:–** பள்ளிக் கல்வி– பள்ளிக்கல்வி இயக்ககம் மற்றும் ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி **(Samagra Shiksha)** இணைந்து நடத்தும் 47 வது ஜவஹர்லால் நேரு மாநில அளவிலான அறிவியல், கணித, சுற்றுப்புற கண்காட்சி, அறிவியல் பெருவிழா மற்றும் கணித கருத்தரங்கம் (2019–20)–ஆம் ஆண்டு நடைபெற அறிவிக்கப்பட்டது – அனைத்து மாவட்டங்களிலும் பள்ளி அளவில், கல்வி மாவட்ட அளவில் மற்றும் வருவாய் மாவட்ட அளவில் நடத்துதல் சார்ந்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் அறிவுரை வழங்குதல்– சார்பு.

**பார்வை:–** புதுடெல்லி, தேசியக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் கடிதம் எண். F.No.6.26/DESM/2019-20, Dt:04.07.2019 மற்றும் வழிகாட்டி நெறிமுறைகள்.

********

பார்வையில் காணும் புதுடெல்லி, தேசியக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் கடிதத்திற்கிணங்க, தேசியக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்துடன் தமிழக அரசின் பள்ளிக்கல்வி இயக்ககம் மற்றும் ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி **(Samagra Shiksha)** இணைந்து அனைத்துப் பள்ளி மாணவர்களின் அறிவியல் ஆர்வத்தினை ஊக்குவிக்கும் வகையில் அறிவியல் கண்காட்சியினை பள்ளி, கல்வி மாவட்டம் மற்றும் வருவாய் மாவட்ட அளவில் நடத்தி அதில் தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்களைக் கொண்டு இறுதியாக மாநில அளவில் அறிவியல் கண்காட்சி நடத்திட அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்கலாகிறது.

தற்போது, இக்கல்வியாண்டில் (2019–20) மேற்குறித்த கண்காட்சியினை பள்ளி, கல்வி மாவட்டம், வருவாய் மாவட்டம் மற்றும் மாநில அளவிலான அறிவியல் கண்காட்சியினை **"Science and Technology for Sustainable Development "** என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு படைப்புகளை தயாரித்து நடத்திட புதுடெல்லி, தேசியக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | விவரம் | அறிவியல் பெருவிழா **(Science Fair)** | அறிவியல் கண்காட்சி **(Science Exhibition)** | ஒரு நாள் கணிதக் கருத்தரங்கம் **(One day Seminar)** |
|---|---|---|---|---|
| 1 | மையக் கருத்து (Theme) | **Science and Technology for Sustainable Development** | | **Periodic Table of Elements** |
| 02 | துணைக் கருத்து (Sub Theme) | <u>6 .Sub Theme</u><br>1. Sustainable Agriculture Practices<br>2. Cleanliness and Health<br>3. Resource management<br>4.Industrial Development<br>5. Future Transport and communication<br>6. Educational Games and Mathematical modelling | | |
| 03 | தகுதியுள்ள மாணவர்கள் (Eligible Students to participate ) | 8 முதல் 10–ம் வகுப்பு வரை பயிலும மாணவ / மாணவிகள் மட்டும். | பிரிவு – I (6 முதல் 8ஆம் வகுப்புகள் வரை) பிரிவு – II (9 முதல் 12 ஆம் வகுப்புகுள் வரை) | 6 முதல் 12–ம் வகுப்புகள் வரை |
| 04 | தகுதியுள்ள பள்ளிகள் (Eligible Schools ) | கீழ்க்காணும் 6 வகை பள்ளிகளைத் தவிர அனைத்து அரசு, உதவிபெறும் மற்றும் மெட்ரிக் பள்ளிகளில் பயிலும் மாணவ் / மாணவியர்கள்.<br>1.Kendriya Vidyalaya Sangathan<br>2.Navodaya Vidyalaya Samiti<br>3. Department of Atomic Energy Schools<br>4.Central Tibetan Schools Administration<br>5. CBSE affiliated Public Schools<br>6. Demonstration Multipurpose schools of Regional Institutes of Education. | | |
| 05 | தகுதியுள்ள படைப்புகள் (Eligible Exhibits) (மாவட்ட அளவில்) | மாவட்ட அளவில் நடைபெறும் போட்டியில் பின்வரும் எண்ணிக்கையில் படைப்புகள் தேர்வு செய்யப்படும். ஒரு மாணவர் 1 கண்காட்சி – 2 படைப்புகள்<br>(6–12 வகுப்புகள்)<br>இரு மாணவர் 1 கண்காட்சி – 1 படைப்புகள்<br>(8–10 வகுப்புகள்)<br>ஆசிரியர் கண்காட்சி – 1<br>மொத்தம் – 4 படைப்புகள் | | ஒரு மாவட்டத்தில் இருந்து 1 படைப்பு மட்டும் |

| | | | | |
|---|---|---|---|---|
| 06 | மதிப்பீடு<br><br>(Evaluation (or) Judgment) | 1. Involvement of Children's Own Creativity and Imagination – (20 Percent )<br>2. Originality and Scientific and Mathematical Innovations in the Exhibit/Model (15%)<br>3. Scientific Thought/Principle/Approach (15%)<br>4.TechnicalSkill, Workmanship and Craftsmanship (15% )<br>5. Utility for Society , Scalability ( 15%)<br>6. Economic (low cost), Portability, Durability , etc (10% ) and<br>7. Presentation – aspects like demonstration, explanation and display (10% )<br>Total - 100%<br>i. 3% Extra weightage may be given to exhibits from Semi Urban Regions.<br>ii. 5% Extra weightage may be given to exhibits from rural / backward Regions. | | 1. கருத்து (Content) – 30 மதிப்பெண்<br>2. கருத்து வெளிப்பாடு (Presentation) – 50 மதிப்பெண்<br>3. விளைவு– (Effectiveness) –20 மதிப்பெண்<br><br>மொத்தம் 100 மதிப்பெண்கள். |
| 07 | மாநில அளவில் ஒவ்வொரு பிரிவிலும் தேர்வு செய்யப்பட உள்ள காட்சிப்பொருளின் எண்ணிக்கை<br><br>(No. of exhibits to be selected from each category ) | 1. 20 படைப்புகள்– ( 1 மாணவர் மட்டும் பங்குபெறும் கண்காட்சி) (8 முதல் 10 ஆம் வகுப்புகள் வரை மட்டும்)<br>2. 15 படைப்புகள் – (2 மாணவர்கள் பங்கு பெறும் கண்காட்சி) (8 முதல் 10 ஆம் வகுப்புகள் வரை மட்டும்)<br>3. 15 படைப்புகள் –ஆசிரியர்கள் பங்கு பெறும் கண்காட்சி | ஒவ்வொரு துணைக் கருத்திலிருந்தும் (Sub theme )<br><br>சிறந்த 3 படைப்புகள்<br>6x 3 = 18 | முதல் மூன்று இடங்களை பெறும் படைப்புகள். |
| 8 | தேசிய அளவிலான போட்டியில் கலந்து கொள்ள தகுதி படைத்த படைப்புகள். | மேற்கண்ட மாநில அளவிலான போட்டியில் தெரிவு செய்யப்படும் படைப்புகள் தென்னிந்திய அளவிலான அறிவியல் பெருவிழாவில் கலந்து கொள்ள இயலும் | மேற்கண்ட மாநில அளவிலான போட்டியில் தெரிவு செய்யப்படும் படைப்புகள் 47 வது ஜவஹர்லால் நேரு தேசிய அளவிலான அறிவியல், கணித, சுற்றுப்புற கண்காட்சி, அறிவியல் பெருவிழா மற்றும் கணித கருத்தரங்கம் கலந்து கொள்ள இயலும் | |

கவனத்தில் கொள்ள வேண்டியவை

மாநில அளவில் அறிவியல் கண்காட்சியில் பங்கேற்கும் மாணவர்கள் தங்கள் படைப்புகளின் **Write-up** கண்டிப்பாக சமர்ப்பிக்க வேண்டும்.

1. மாநில அளவிலான அறிவியல் கண்காட்சியில் பங்கேற்கும் மாணவர்கள் (8 முதல் 10–ம் வகுப்பு மாணவர்கள்) இக்கடிதத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் தேசிய அறிவியல் கண்காட்சிக்கான நுழைவுப் படிவம் (1) –ல் பூர்த்தி செய்திட வேண்டும்.

2. மாநில அளவில் நடைபெறும் கண்காட்சி / பெருவிழாகளுக்கான நடுவர்களுக்கு ரூ.1800/– மதிப்பூதியம் வழங்கப்பட வேண்டும்.

3. நுழைவுப் படிவத்தில் வலது மேற்புறத்தில் பங்கு பெறும் மாணவனின் / ஆசிரியரின் புகைப்படத்தை ஒட்டி பெயர், பள்ளி , வகுப்பு , மற்றும் Sub Theme முதலிய விவரங்களை தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

4. பங்கு பெறும் மாணவர்கள், ஆசிரியர்கள், பள்ளி, கண்காட்சி சார்ந்து அனைத்து விவரங்களும் சரியாகவும் தெளிவாகவும் கீழ்க்காண் தேசிய கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் அளிக்கப்பட்டுள்ள படிவங்களில் அளிக்கப்பட வேண்டும்.

- படிவம் –1 : மாணவர்களின் படைப்புகள் சார்ந்த தகவல்
- படிவம் –2 : நடுவர்களின் விவரங்கள்
- படிவம்–3 : பங்குபெறும் பள்ளிகள் பற்றிய தகவல்
- படிவம் –4 : படைப்புகள் சார்ந்த தகவல்
- படிவம் –5 : கணக்கு பராமரிப்பு சார்ந்த தகவல்
- படிவம் –6 : படைப்புகள் மதிப்பீடு சார்ந்த தகவல்

5. கண்காட்சி மற்றும் கருத்தரங்கில் மாற்றுத்திறனாளி மாணவர்களும் பங்கேற்க செய்து , அவர்களின் சிறந்த படைப்புகளுக்கு சிறப்பு பரிசுகள் வழங்க வழிவகை செய்திட வேண்டும்.

மேற்குறித்த பொருள் சார்பாக பள்ளி, கல்விமாவட்டம் மற்றும் வருவாய் மாவட்ட அளவிலான அறிவியல் கண்காட்சியினை பின்வரும் நாட்களில் நடத்துவது சார்ந்தும் ,

| வ. எண் | போட்டிகள் | போட்டி நடைபெறும் தேதி | பொறுப்பு அலுவலர் |
|---|---|---|---|
| 1) | பள்ளி அளவில் | 05.10.2019 க்குள் | தலைமை ஆசிரியர் |
| 2) | கல்வி மாவட்ட அளவில் | 10.10.2019 க்குள் | மாவட்டக் கல்வி அலுவலர் |
| 3) | வருவாய் மாவட்ட அளவில் | 14.10.2019 மற்றும் 15.10.2019 | முதன்மைக் கல்வி அலுவலர் |

மற்றும் 15.10.2019 அன்று டாக்டர் ஏ.பி.ஜே.அப்துல் கலாம் அவர்களின் பிறந்த நாளினை (இளைஞர் எழுச்சி நாள்) கொண்டாடுவது சார்பாக அனைத்துப் பள்ளித் தலைமை

ஆசிரியர்களுக்கும் உரிய அறிவுரை வழங்கக் கோரியும், அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்களுக்கும் அறிவிக்கலாகிறது. மேலும், அறிவியல் கண்காட்சி நடத்திட ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வியால் **(Samagra Shiksha)** விடுவிக்கப்படும் நிதியினை அவ்வியக்ககத்தால் வழங்கப்படும் அறிவுரைகளுக்கு உட்பட்டு நிதியினைப் பயன்படுத்திக் கொள்ள அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் அறிவுறுத்தலாகிறது.

மேற்குறித்த அறிவியல் கண்காட்சியினை பள்ளி அறிவியல் ஆசிரியர்கள், மாணவர்கள் , அறிவியல் ஆர்வலர்கள் மற்றும் பல்கலைக் கழக அறிவியல் பேராசிரியர்கள் ஆகியோர்களின் வழிகாட்டுதலோடு சிறப்பாக திட்டமிட்டு நடத்திட வேண்டும். மேலும், இந்த அறிவியல் கண்காட்சிகள் நடைபெறும் நாள்களில் ஊடகங்களில் இந்நிகழ்வினை வெளியிட்டு பொதுமக்கள் கண்டுகளிக்கும் வகையிலும், பாராட்டும் வகையிலும், உரிய ஏற்பாடுகளைச் செய்திட வேண்டும். உள்ளூர் பிரமுகர்கள், சட்டமன்ற மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தலைமையில் நடத்தி முடிக்கவும், கண்காட்சி நடத்தப்படும் நாளில் மாணவர்களின் பாதுகாப்பிற்குரிய அனைத்து ஏற்பாடுகளை செய்யவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ள அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் அறிவுறுத்தலாகிறது.

இணைப்பு
பார்வையில் காணும் அறிவிக்கை

பள்ளிக்கல்வி இயக்குநர்

பெறுநர்
1.அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்கள்
2. அனைத்து மாவட்டக்கல்வி அலுவலர்கள்.

நகல்
அரசு முதன்மைச் செயலாளர்,
பள்ளிக்கல்வித்துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை–9 – அவர்களுக்குத் தகவலுக்காகப் பணிந்து அனுப்பலாகிறது.